
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | நவம்பர் 29, 2018 | புரட்சி 17 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00

## கழக ஏடுகளுக்கு சந்தா சேர்ப்பதில் தோழர்கள் தீவிரம்

# மாவட்டக் கலந்துரையாடல்களில் எழுச்சி

## டிசம்பர் 24 கருஞ்சட்டைப் பேரணிக்கு தயாராகிறார்கள்

**டிசம்பர் 24ஆம் தேதி திருச்சி கருஞ்சட்டைப் பேரணிக்கு தயாராகி வரும் கழகத் தோழர்கள் கழக ஏடுகளான 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' இதழுக்கு சந்தா சேர்க்கும் இயக்கத்திலும் முனைப்போடு செயல்பட்டு வருகிறார்கள்.**

மாவட்டக் கழகத் தோழர்களுடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் நேரில் சந்தித்து கலந்துரையாடல் கூட்டங்களில் பங்கேற்று வருகின்றனர்.

முதல் கட்டமாக பயணம் நவம்பர் 21ஆம் தேதி காலை ஈரோடு வடக்கு மாவட்டம் கோபியில் காலை 11.30 மணியளவில் கழகத் தோழர் நிவாஸ் இல்லத்தில் நடந்தது. ஈரோடு வடக்கு மாவட்டமான கோபியில் 7 ஒன்றியங்களில் கழக அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. கல்வி உரிமை பரப்புரைப் பயணத்தைத் தொடர்ந்து ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத் தோழர்கள் பரப்புரைக்காக வாங்கியுள்ள வாகனத்தைப் பயன்படுத்தி கிராமம் கிராமமாக பரப்புரையை தொடர் நிகழ்வாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. கழக வெளியீட்டுப் பிரிவு செயலாளர் கோபி. இளங்கோ இந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்.

கழகச் செயல்பாட்டாளரும் பரப்புரைப் பயணத்தின் ஒருங்கிணைப்பாளராக செயலாற்றியவருமான வேணுகோபால் - கடவுள் ஆத்மா மறுப்பு கூறி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். கழக ஏடுகளான புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம் ஏடுகளுக்கு புதிய சந்தாக்கள் சேர்ப்பது குறித்தும், டிசம்பர் 24ஆம் தேதி திருச்சியில் பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் நடக்கவிருக்கும் கருஞ் சட்டைப் பேரணி மாநாட்டுக்கு கழகத் தோழர்கள் பெருமளவில் திரண்டு வருவது குறித்தும் கலந்துரை யாடல் கூட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டது. ஏற்கனவே 'முழக்கம்', 'நிமிர்வோம்' இதழ்களுக்கு தோழர்கள் திரட்டிய சந்தாக்களையும் ஒப்படைத்தனர்.

கோபி கலந்துரையாடலில் ஜெயக்குமார் (டி.என்.பாளையம் ஒன்றிய செயலாளர்), அருளானந்தம் (கோபி ஒன்றிய பொறுப்பாளர்), மூர்த்தி (சத்தியமங்கலம் ஒன்றிய பொறுப்பாளர்), கழகப் பேச்சாளர் வேலுச்சாமி, சுப்ரமணியன் (கொளப்பலூர் கிளைத் தலைவர்), பழனிச்சாமி (சதுமுகை ஒன்றிய பொறுப்பாளர்), கழக ஆதரவாளர் ஆசைத்தம்பி மற்றும் கழகத் தோழர்கள் தங்கம், மணிமொழி, ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி, மாவட்ட அமைப்பாளர் நிவாஸ், அழகிரி (எலத்தூர்) அறிவியல் மன்றத் தோழர் ஆசிரியர் சுந்தரம், கே.ஆர். மணி ஆகியோர் கழக வளர்ச்சித் திட்டங்கள், கழக ஏடுகளுக்கு மேலும் சந்தாக்களை சேர்த்தல் குறித்து கருத்துகளைத் தெரிவித்தனர். தொடர்ந்து வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன், பொருளாளர் துரைசாமி, சூலூர் பன்னீர்செல்வம், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர்.

**ஈரோடு :** நவம்பர் 21ஆம் தேதி மாலை 6 மணியளவில் ஈரோடு தெற்கு மாவட்ட கலந்துரையாடல், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பட்டறை வளாகத்தில் ஆசிரியர் சிவக்குமார் கடவுள், ஆத்மா மறுப்புக் கூறத் தொடங்கியது. சண்முகப் பிரியன் வரவேற்றுப் பேசினார். கழகத் தோழர்கள் குமார், கிருஷ்ணமூர்த்தி, சுந்தரமூர்த்தி (எழிலன்), சவுந்தர் (மாணவர் கழகம்), பிரதீப் (மாணவர் கழகம்), மணிமேகலை, கமலக் கண்ணன், கதிர், சென்னிமலை செல்வராஜ், மாவட்ட தலைவர் செல்வராஜ், பத்மநாபன், ஆசிரியர் சிவக்குமார், பிரேமா, சத்தியமூர்த்தி ஆகியோர் பேசினர். அமைப்புச் செயலாளர், பொருளாளர், சூலூர் பன்னீர் செல்வம், கழகப் பொதுச் செயலாளர், கழகத் தலைவர், கழக ஏடுகளுக்கு சந்தா சேர்ப்பு இயக்கம், டிசம்பர் 24 இல் திருச்சி கருஞ்சட்டைப் பேரணிக்கு தோழர்கள் திரண்டு வருதல் குறித்து விரிவாகப் பேசினர். தோழர்களுடன் கலந்து ஆலோசித்து, மாவட்டக் கழகத்துக்கு புதிய பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.

மாவட்டத் தலைவர் சென்னிமலை செல்வராஜ்; மாவட்ட செயலாளர் எழில் சுந்தரமூர்த்தி; மாவட்ட பொருளாளர் சண்முகப்பிரியன்; மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி; மாநகரத் தலைவர் மரவபாளையம் குமார்; மாநகரச் செயலாளர் திருமுருகன்; தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் கொங்கம்பாளையம் சவுந்தர்.

**நாமக்கல் :** நாமக்கல் மாவட்டத்தில் தொடங்கியது இரண்டாம் நாள் பயணம். நவம்பர் 22ஆம் தேதி பகல் 11 மணியளவில் திருச்செங்கோடு 'கண்ணாத்தாள்' மண்டபத்தில் தோழர் தனலட்சுமி - கடவுள், ஆத்மா மறுப்பு கூற நிகழ்ச்சிகள் தொடங்கின. அமைப்பு செயலாளர் இரத்தினசாமி, சந்திப்பின் நோக்கத்தை விளக்கினார். சரவணன் (மாவட்ட செயலாளர்), முத்துப்பாண்டி (அமைப் பாளர்), சதீஷ்குமார் (திருச்செங்கோடு ஒன்றிய தலைவர்), தண்டபாணி (குமாரபாளையம்), மலர் (இராசிபுரம்), மனோஜ் (மாணவர் கழகம்), ரஜினா (பள்ளிப்பாளையம்), நாகலட்சுமி (திருச்செங்கோடு), பெரியண்ணன் (மல்லசமுத்திரம்), தியாகு (கோயிலங் காடு), சங்கர் (பள்ளிப்பாளையம்), பிரகாசு (பள்ளிப் பாளையம்), சேகுவாரா (இராசிபுரம்), கணபதி (குமாரபாளையம்) ஆகியோர் உரையாற்றினர். அமைப்பாளர் வைரம் வரவேற்று உரை நிகழ்த்திய தோடு, தோழர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு விளக்கம் அளித்துப் பேசினார். நாமக்கல் கலந்துரை யாடலில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. பொறுப்புகளில் பெண்களை நியமிக்க மாவட்டக் கழகம் முடிவெடுத்துள்ளதை நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்த முத்துப்பாண்டி அறிவித்தார். சூலூர் பன்னீர்செல்வம், பொருளாளர், பொதுச்செயலாளர், தலைவர் உரையாற்றியதைத் தொடர்ந்து கழகத் தோழர்களின் ஆலோசனையோடு கீழ்க்கண்ட புதிய பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.

**திருச்செங்கோடு நகர பொறுப்பாளர்கள் :** நகரத் தலைவர் ஞானசேகர்; நகரச் செயலாளர் ஆ. பூபதி; நகர அமைப்பாளர் வை. தனலட்சுமி; இளைஞரணி அமைப்பாளர் விஜய குமார்.

**கருவேப்பப்பட்டி ஒன்றிய பொறுப்பாளர்கள்:** ஒன்றியத் தலைவர் து. சதீஷ்குமார்; ஒன்றிய செயலாளர் பிரியா.

**காடச்சநல்லூர் ஒன்றிய அமைப்பாளர் :** செல்வகுமார். மல்லை ஒன்றிய அமைப்பாளர் பெரியண்ணன். இராசிபுரம் நகர அமைப்பாளர் பிடல் சேகுவாரா.

**பள்ளிப்பாளையம் நகரப் பொறுப்பாளர்கள்:** நகரத் தலைவர் மீனாட்சி; நகர செயலாளர் ஷஜீனா; நகரப் பொருளாளர் மு. சரவணன்; நகர அமைப் பாளர் கோபி; நகரத் துணைத் தலைவர் தம்பித்துரை; நகரத் துணைச்செயலாளர் சங்கர்; நகர இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ்; ஆலாம்பாளையம் ஒன்றிய அமைப்பாளர் தியாகு.

**குமாரபாளையம் நகரப் பொறுப்பாளர்கள்:** நகரத் தலைவர் மீ.த. தண்டபாணி; நகர செயலாளர் வடிவேல்; நகர துணைச் செயலாளர் மாதேஸ்வரன்; கத்தேரி ஒன்றியம் அமைப்பாளர் ப.முருகாண்டி.

மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன்; மாவட்ட செயலாளர் மு.சரவணன்; மாவட்ட அமைப்பாளர் அ. முத்துப்பாண்டி; மாவட்ட துணைத் தலைவர் திராவிட மணி; மாவட்ட காப்பாளர் மு. கேப்டன் அண்ணாதுரை; மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.பிரகாசு; தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் மனோஜ் குமார்.

**திருப்பூர் :** நவம்பர் 22ஆம் தேதி மாலை 6 மணியளவில் திருப்பூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் கழகப் பொருளாளர் துரைசாமி, தோட்ட வளாகத்தில் மடத்துக்குளம் மோகன் - கடவுள், ஆத்மா மறுப்பு கூறத் தொடங்கியது. சந்திப்பின் நோக்கத்தை அமைப்புச் செயலாளர் விளக்கினார். மாவட்ட தலைவர் முகில்ராசு, செயலாளர் நீதிராசன், சன்பாண்டியன், அகிலன், ராஜசிங்கம், தனகோபால், சங்கீதா, மாதவன் (மாநகர செயலாளர்), நகுலன், ஆசிரியர் சிவகாமி, பரிமளராசன் (முகநூல் பொறுப்பாளர்), விஜயகுமார் (இணையதள பொறுப்பாளர்), முத்துலட்சுமி, முத்து (மாநகர அமைப்பாளர்), இராமசாமி, தனபால் (மாநகர தலைவர்), மணி, அனிதா (சூலூர்) ஆகியோர் உரையாற்றினர்.

கூட்டத்தில் தோழர் நீதிராசு ரூ5000/-மும், தோழர் இராமசாமி ரூ.5000/-மும் கட்டமைப்பு நிதியாக கழகத் தலைவரிடம் வழங்கினர். கழக ஏடுகளுக்கு தோழர்கள் சேர்த்த சந்தாக்கள் ஒப்படைக்கப்பட்டு, மேலும் சந்தாக்களை டிசம்பர் 15க்குள் சேகரிக்க தோழர்கள் உறுதியளித்தனர். தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், சூலூர் பன்னீர்செல்வம் உரையாற்றினர். புரட்சிப் பெரியார் முழக்கம் தொடங்கிய வரலாற்றையும் கடந்து வந்த பாதை களையும் 'நிமிர்வோம்' இதழுக்கு கிடைத்து வரும் ஆதரவு குறித்தும் விளக்கி பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார்.

**கோவை :** மூன்றாம் நாள் நவம்பர் 23ஆம் தேதி பயணம் கோவையில் தொடங்கியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேச்சாளரும், திராவிடர் இயக்கக் கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்டு மேடைகளில் முழங்கி வந்தவருமான கோவை மு.இராமநாதன், முதுமையில் இல்லத்தில் உடல்நலன் பாதித்த நிலையில் ஓய்வில் இருந்து வருகிறார். கழகத் தலைவர், பொதுச் செயலாளர், கழகப் பொறுப் பாளர்களோடு அவரது இல்லம் சென்று சந்தித்து உரையாடினர். கோவை இராமநாதன் மகன் செல்வராஜ், அவரது துணைவியார் அன்புடன் வரவேற்று, கோவை இராமநாதன் அவர்களின் தீவிர இயக்கப் பற்று குடும்பங்களையும் கடந்து கொள்கையில் காட்டிய உறுதியை நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டனர். கோவை இராமநாதன் அதிகம் பேச இயலாத நிலையில் பெரியார் இயக்கத் தோழர்கள் சந்திக்க வந்ததில் மிகவும் நெகிழ்ச்சி யடைந்தார். அவர் எழுதிய நூல்களை கையெழுத்திட்டு வழங்கினார். "காசோலையில் கையெழுத்திட மறுக்கிறார் அப்பா. உங்களுக்கு மட்டும் கையெழுத்திடுகிறார்" என்று உருக்கமுடன் கூறினார், கோவை இராமநாதன் அவர்களின் மகனும் தி.மு.க. செயற்பாட்டாளருமான செல்வராஜ், தி.மு.க.வின் கலை இலக்கியப் பேரவையைச் சார்ந்தவரும் பெரியாரியலாளருமான கார்த்திக் இந்த சந்திப்பில் கழகத் தோழர்களுடன் உடனிருந்தார்.

கோவை இராமநாதன் சந்திப்பிற்கு முன்பாக காலை 10 மணியளவில் மனித உரிமை இயக்கத்தின் செயற்பாட்டாளர், பொன் சந்திரன் அவர்களை கோவையில் அவரது இல்லத்தில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர் தோழர்களோடு சந்தித்து உடல்நலம் விசாரித்தனர். கோவையில் இராணுவ வாகன முற்றுகைப் போராட்டத்தில் தனது துணைவியார் தனலட்சுமியுடன் கைதாகி 60 நாட்கள் கோவை சிறையிலிருந்தவர் பொன் சந்திரன். மோடி ஆட்சியில் இந்துத்துவா திணிப்பு குறித்தும், மனித உரிமை ஆர்வலர்கள், சிந்தனையாளர்கள் மோசமாக ஒடுக்கப்படுவது குறித்தும் கவலையோடு

(4 ஆம் பக்கம்)

## மருத்துவர் தாயப்பன் பேச்சு

# ஈழத்தமிழர் உரிமைகளைத் தடுப்பது இந்திய ஆளும் பார்ப்பன வர்க்கம்

*26.11.2018 இல் சென்னையில் கழகக் கருத்தரங்கில் மருத்துவர் தாயப்பன் உரையிலிருந்து:*

ஈழத் தமிழர்களுக்கு இரண்டு வகையில் நாம் ஆதரவினைக் காட்டுகிறோம். ஒன்று நமது தொப்புள் கொடியான தமிழர் என்ற ஆதரவு; மற்றொன்று இனம் என்ற எல்லையைக் கடந்து மனிதர் என்ற கண்ணோட்டத்தில் அவர்களுக்கான உரிமைகளுக்கு ஆதரவு. இன அழிப்புப் போரில் இனப்படு கொலைக்குள்ளான அவர்களுக்கு இதுவரை எந்த நிவாரண நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 40 ஆண்டுகளாக எவரையும் விசாரணையின்றி சிறையிலடைக்கும் பயங்கரவாத சட்டம் அங்கே அமுலில் இருக்கிறது. அது ஒரு இராணுவச் சட்டம். எந்த ஒரு நாட்டிலும் இவ்வளவு காலம் ஒரு பயங்கரவாதச் சட்டம் நீடித்து இருந்தது இல்லை. இராணுவம் ஆக்கிரமித்த நிலங்கள் அவர்களிடம் முழுமையாக திருப்பித் தரப்படவில்லை. உளவியல் ரீதியாக அழுத்தத்திற்கும் தோற்கடிக்கப்பட்டோம் என்ற மனநிலைக்கும் உள்ளான அம்மக்களின் படைப்பாற்றல் திறன் முழுமையாக முடங்கி விட்டது.

ஈழத் தமிழர்களின் திறன், படைப்பாற்றலுக்கு உதாரணம் கூற வேண்டுமானால் சுனாமி பேரழிவை இரண்டே மாதங்களில் விடுதலைப் புலிகள் மறு சீரமைப்பு செய்து மக்களுக்கு மறுவாழ்வு தந்ததைக் குறிப்பிடலாம்.

ஈழ விடுதலைப் போர் தொடங்கி சுமார் 40 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த இடைக் காலத்தில் 25 நாடுகள் தனிநாடுகளாகிவிட்டன. ஈழத் தமிழர்கள் கோரும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை சர்வதேசம் ஏற்றுக் கொண்ட ஒன்று. ஆட்சிக்கு வந்த சிறிசேனா 100 நாட்களில் ஈழத் தமிழர்களுக்கு சீரமைப்பு நடவடிக்கைகளை செய்து முடிப்பேன் என்று உறுதி கூறினார். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. அவர்கள் அதிகாரப் போட்டியில் சிக்கிக் கொண்டு அவர்களுக்கான 'சீரமைப்பு'




அரசியலைத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா - ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து துரோகம் செய்து வருகிறது. இந்தியா என்றால் அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் பார்ப்பன ஆளும் அதிகார வர்க்கம் தான் தீர்மானிக்கிறது.

சட்ட எரிப்புப் போராட்ட வரலாற்றில் ஒரு செய்தி வருகிறது. திருச்சி குளித்தலையில் பெரியார் - பார்ப்பனர்களை குத்தச் சொன்னார்; வெட்டச் சொன்னார் என்று பேசியதற்காக பெரியார் மீது ஒரு வழக்குப் போடப்பட்டு சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்க விடாமல் முன்கூட்டியே அவர் கைது செய்யப்படுகிறார். அப்போது பிரதமர் நேரு பேசவிருந்த கூட்டத்துக்கு அரசு வழக்கறிஞர் நீதிபதி ஆகியோர் அழைக்கப்படுகிறார்கள். அவர்களை வைத்துக் கொண்டு பெரியாரைப் போன்ற தேச விரோதிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று நேரு பேசுகிறார். அவர் பேசியதற்குப் பிறகு சட்டத்தை எரித்தப் போராளிகளுக்கான தண்டனைக் காலத்தை 9 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை உயர்த்தி நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினார்கள்.

ஆளும் பார்ப்பன வர்க்கம் எப்படி செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு சான்று.

இங்கே நக்கீரன் கோபாலை தேச விரோத சட்டத்தில் கைது செய்ய ஆளுநர் மாநிகையிலிருந்து புகார் தரப்படுகிறது. நக்கீரன் கோபாலை சந்திக்க வைகோ, திருமாவளவன் எல்லோரும் நீதிமன்றம் விரைகிறார்கள். இவர்கள் இயக்கங்களின் தலைவர்கள். போராட்டக் களத்தில் நிற்பவர்கள். ஆனால் ஒரு பத்திரிகை ஆசிரியராக நீதிமன்றம் சென்ற 'இந்து' இராமை அழைத்து நீதிபதி கருத்து கேட்கிறார். அவர் பேசிய பிறகு, ரிமாண்ட் செய்ய மறுத்து நீதிபதி விடுதலை செய்கிறார். இந்த வாய்ப்பை நீதிமன்றம் ஒரு பார்ப்பனரல்லாதாருக்கு வழங்கி யிருக்குமா என்பதுதான் சிந்திக்க வேண்டிய கேள்வி.

அண்மையில் கூத்துப் பட்டறை முத்துசாமி என்ற கலைஞர் முதிர்ந்த வயதில் முடிவெய்தினார். அவர் பல கலைஞர்களை தயார் செய்தவர். முற்போக்கானவர். கூத்துக் கலையை பரப்பிய புரட்சியாளர் என்று ஏடுகளில் செய்தி வந்தது. முறுக்கு மீசை தோற்றத்தோடு இருந்தார்.

நான்கூட அவர் முற்போக்குப் புரட்சியாளர் என்றுதான் கருதியிருந்தேன். இது அவருடைய ஒரு முகம். அவர் மறைந்த நாளில் அவரது மற்றொரு படம் வெளி வந்திருந்தது. அதில் முதுகில் பூணூலோடு தான் அவர் இருந்தார். அது அவரின் மற்றொரு முகம்.

ஆளும் வர்க்கமான பார்ப்பன வர்க்கம், சமூகத்தில் அதிகாரச் செல்வாக்கோடு இருக்கிறது என்பதற்காகவே இதைச் சுட்டிக்காட்டினேன். அயலுறவுக் கொள்கைகளை எடுக்கும் அதிகாரத்தில் பார்ப்பன ஆளும் வர்க்கம் இருப்பதால்தான் ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளும் நீதிகளும் மறுக்கப்படுகின்றன. தமிழர்களாகிய நாம் வலிமையான இனமாக மாற வேண்டுமானால் ஜாதியற்ற தமிழர்களாக வேண்டும்; ஜாதியை மறுத்து ஜாதி ஒழிப்புக்கான தமிழர்களாக செயல்பட வேண்டும் என்றார் மருத்துவர் தாயப்பன்.

## சென்னையில் மாவீரர் நாள் – சட்ட எரிப்பு நாள் கருத்தரங்கம்





சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் மயிலாப்பூர் பகுதிக் கழகம் சார்பில் நவம்பர் 25ஆம் நாள் மாவீரர் நாள் சட்ட எரிப்பு நாள் கருத்தரங்கம் நவம்பர் 26 மாலை சேப்பாக்கத்திலுள்ள பத்திரிகையாளர் அரங்கில் எழுச்சியுடன் நடைபெற்றது. மயிலைப் பகுதி கழகப் பொறுப்பாளர் இராவணன் தலைமை தாங்கினார். நாத்திகன், பெரியார்-அம்பேத்கர்-ஈழப் போராளிகள் குறித்துப் பாடல்களைப் பாடினார்.

ஈழப் போரில் இன்னுயிர் ஈத்த மாவீரர்களின் நினைவாக நினைவுச் சுடரை மருத்துவர் தாயப்பன் ஏற்றினார். இரண்டு நிமிடம் மவுனம் அனுசரிக்கப்பட்டது. தொடர்ந்து மருத்துவர் தாயப்பன், 'ஈழம் நமது கடமை' எனும் தலைப்பில் உரையாற்றினார். தொடர்ந்து தோழர்கள் ஜாதி ஒழிப்புப் போராளிகள் நினைவாக ஜாதி ஒழிப்பு உறுதிமொழியை ஏற்றனர். 'பெரியாரின் இன்றைய தேவை' எனும் தலைப்பில் விடுதலை இராசேந்திரனும், 'சட்ட எரிப்புப் போராட்டம்' குறித்து கொளத்தூர் மணியும் விரிவாகப் பேசினர். அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. அனைவருக்கும் மயிலைப் பகுதி தோழர்கள் மாட்டுக்கறியுடன் இரவு உணவு வழங்கினர்.

### சென்னை கருத்தரங்கில் தோழர்கள் ஏற்ற உறுதி மொழி

"பெரியாரின் ஆணையை ஏற்று அரசியல் சட்டத்தின் ஜாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளை 1957ஆம் ஆண்டு நவம்பர் 26ல் 10,000 பேர் எரித்து, 3 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறைவாசத்தை ஏற்ற கருஞ்சட்டை மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்து கிறோம்.

சிறைக்குள்ளேயும், விடுதலையான ஒரு மாதத்துக்குள் சிறைக்கு வெளியிலும் சிறைக் கொடுமையால் உடல் நலம் பாதித்து வீரமரணத்தைத் தழுவிய 18 போராளிகளின் லட்சிய நெருப்பை நெஞ்சில் ஏந்துகிறோம்.

ஜாதி ஒழிப்புக்காக பெரியார் விட்டுச் சென்ற போராட்ட மரபை முன்னெடுக்கவும், சுயஜாதி மறுப்பு உணர்வோடு- ஜாதி ஆதிக்க- ஜாதி வெறி சக்திகளை எதிர்த்துக் களமாடவும் உறுதி ஏற்கிறோம்.

வாழ்க பெரியார்!

வீழட்டும் பார்ப்பனிய ஜாதியமைப்பு"

## குழப்பவாதிகளுக்கு கொளத்தூர் மணி விளக்கம் (8)

# இந்தித் திணிப்பையும் ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டத்தையும் ஆதரித்தவர்தான் ம.பொ.சி.

***“கருஞ்சட்டைக் கலைஞர்” என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.***

எந்தவிதமான மரியாதைக்குரிய பண்பும் இல்லாத தலைவராகத்தான் ம.பொ.சி. வாழ்ந்திருக்கிறார். காங்கிரசுக்கு உள்ளேயே இருந்துகொண்டு 1946ஆம் ஆண்டு தமிழரசுக் கழகத்தை ம.பொ.சி. உருவாக்கினார். 1938ஆம் ஆண்டிலேயே பெரியார் தனித் தமிழ்நாடு கேட்டார். ஆனால் அதற்குப் பிறகு 8 ஆண்டுகள் கழித்து அமைப்பு தொடங்கிய ம.பொ.சி.தான் முதன்முதலில் தமிழ்நாடு கேட்டார் என்று தமிழ்தேசியவாதிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது முதலில் சுதந்திரத் தமிழரசு அமைப்பதே என் லட்சியம் என்றார். பிறகு 1953ஆம் ஆண்டில் வெளியாட்கள் சுரண்டல் இல்லாத தமிழ்நாடு அமைந்தாலே போதும் என்றார்.

இந்து பார்ப்பன நாளேட்டுக்கு ம.பொ.சி. எழுதிய கடிதத்தில், ‘என் ஆயுளில் இதுவரை சுதந்திரக் குடியரசு தேவை என்று நான் பேசியதே இல்லை’ என்று எழுதினார். இந்த மாதிரியான பிளவு முயற்சிகளை எதிர்ப்பதற்காகவே தமிழரசுக் கழகம் தொடங்கப்பட்டது என்று தான் தனிநாடு கேட்பதாக இந்து வெளியிட்ட செய்தியை மறுத்தார். ”என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னை விட கிராமணியை (ம.பொ.சி.) அதிகம் தாக்குகிறார்கள். அதற்குக் காரணம் உண்டு. கிராமணியார் வீர அபிமன்யு போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூகத்தை உடைத்து, என்னை உள்ளே அழைத்துச் செல்பவர்” என்று ம.பொ.சியைப் புகழ்ந்து ராஜாஜி தனது வாழ்க்கை வரலாறு போன்ற ஒரு நூலில் எழுதியிருக்கிறார்.

உடனே ம.பொ.சியும் தன்னை ராஜாஜியின் கையாள் என்பதை ஒப்புக்கொள்வதைப் போல எழுதுகிறார். தேசிய ஒருமைப்பாட்டைக் கருதியேனும் இந்துக்கள் குறிப்பாக தமிழகத்தார் இந்து மதத்தை உறுதியாகக் கடைபிடித்து வரவேண்டியிருக்கிறது என்றும் ம.பொ.சி பேசினார். இப்போது தமிழிசையும், ராதாகிருஷ்ணனும் பேசியதை, அவர்கள் ஆளாக அப்போதே பேசியவர்தான் இந்த ம.பொ.சி. ஒருமுறை சமஸ்கிருத தினத்தில் ம.பொ.சி. பேசுகையில், “இந்தியாவில் ஆதி மதமான இந்து மதம்தான் இந்திய ஒருமைப்பாட்டின் ஆணிவேராக இருந்து வருகிறது. தமிழ் மொழி எனது தாய் மொழி. ஆனால் இந்தியன் என்ற முறையில், இந்து என்ற வகையிலே சமஸ்கிருதம் எனது கலாச்சார மொழி” என்கிறார். ம.பொ.சி. எழுதிய தமிழும், சமஸ்கிருதமும் என்ற நூலில் இந்தத் தகவல் இருக்கிறது.

1951 ஆகஸ்ட் 1, 1952 ஆகஸ் 1, 1953 ஆகஸ்ட் 1 ஆகிய மூன்று ஆண்டுகளும் ரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தை பெரியார் நடத்துகிறார். இதையடுத்து 1954ஆம் ஆண்டில் தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை பெரியார் அறிவித்தார். அதற்குப்பிறகு 1957ஆம் ஆண்டில் அரசியல் சட்டம் எரிப்புப் போராட்டம் நடத்தினார். ஆனால் 1951 மார்ச் முதல் நவம்பர் வரை நாடு முழுவதும் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை ம.பொ.சி. நடத்தினார். அந்த மாநாடுகளில் விபூதி வீரமுத்து, அனுகுண்டு அய்யாவு (இந்தக்காலத்து எஸ்.வி.சேகர் போன்றவர்கள்) போன்ற பேச்சாளர்கள் மிகவும் தரம் தாழ்ந்து பெரியாரையும், அவரது கொள்கைகளையும் சாக்கடை மொழியில் ம.பொ.சி. முன்பாகவே பேசி வந்தனர்.

அப்பன் தொழிலை பிள்ளைகள் செய்ய வேண்டுமென்று தொடக்கப் பள்ளிகளில் ஆச்சாரியார் அறிமுகப்படுத்திய குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து பெரியார் போர்க்கொடி உயர்த்தினார். ஆனால் அந்த குலக்கல்வித் திட்டத்தை ஆதரித்து தமிழரசுக் கழகத்தின் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். மற்ற எல்லோரும் இந்த குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தார்கள். குறிப்பாக காங்கிரசு கட்சியைச் சேர்ந்த அப்போதைய தமிழ்நாடு காங்கிரசு கமிட்டியின் தலைவராக இருந்த காமராசர் எதிர்த்தார். பொதுச் செயலாளராக இருந்த சேலம் சாரதா கல்லூரியின் அதிபர் பாரிஸ்டர் எஸ்.விராமசாமி (பின்னாளில் மத்திய ரயில்வே அமைச்சராக இருந்தவர்) எதிர்த்தார். இந்த நாட்டின் தொற்றுநோய் போல வந்தவர்கள் இந்தியைத் திணிக்கிறார்கள் என்று எஸ்.வி.ராமசாமி பேசினார். ஆனால் குலக்கல்வித் திட்டம் எங்களுக்கு வேண்டும், அப்பன் தொழிலைத்தான் நாங்கள் செய்வோம் என்று ம.பொ.சி. யின் தமிழரசுக் கழகத்தின் தலைமை செயற்குழு ராஜாஜியை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியது.



இரயில் நிலையங்களில் இந்தி எழுத்துக்களை தார் பூசி அழிக்கும் போராட்டத்தை பெரியார் நடத்திய போது, தார்பூசி மறைத்த இந்தி எழுத்துகளை மண்ணெண்ணெய் ஊற்றி அழித்து ம.பொ.சி. தனது இந்தி ஆதரவை வெளிப்படுத்தினார். எனவே இந்தி எதிர்ப்பு உணர்வும் இவருக்கு இல்லை. ம.பொ.சியின் வாழ்க்கை வரலாற்றை இந்திய இலக்கிய சிற்பிகள் என்ற பெயரில் பெ.சு.மணி என்ற ஆய்வாளர் எழுதியிருக்கிறார். திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை காங்கிரஸ் பெயரால் நடத்தாமல், திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணி என்ற பெயரால் ம.பொ.சி நடத்தினார் என்று அந்த நூலில் பெசுமணி கூறுகிறார். பகுத்தறிவுவாதம், மூட நம்பிக்கைகளை ஒழித்தல், இன உணர்ச்சி என்ற பெயரால் தமிழக மரபு, பண்பாடு, ஆன்மீகம் ஆகியவற்றிலிருந்து திசை திருப்பி தவறிச் செல்லாமல் கட்டிக் காத்தன திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகள் என்றும் அந்த நூலில் அவர் எழுதியிருக்கிறார்.

“நான் தமிழன் என்னும் உணர்வுடையவன், தமிழ் பேசும் எல்லா மக்களுக்கும் இந்த உணர்வு வரவேண்டும் என்று எண்ணுபவன். ஆயினும் தமிழன் என்ற வகையிலே எனக்கு இந்த உலகில் உள்ள உறவுகள் சுமார் 4 1/2 கோடி பேர்தான். ஆனால் இந்துவாக இருப்பதால் 50 கோடிக்கும் மேற்பட்ட மக்களோடு உறவு கொள்ள முடிகிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த உறவுக்காகத்தான் நான் இந்துவாக இருக்கிறேன். இனியும் அப்படியே இருக்கப்போகிறேன். சமஸ்கிருதம் இந்துக்களின் பொது மொழியாக இருப்பதன் காரணமாக இம்மொழியில் அர்ச்சனையை விரும்புவோருக்கு தடை சொல்லக்கூடாது. இது இந்து மதத்தவரின் ஒருமைப்பாட்டுக்கு உதவிபுரியும்” என்றெல்லாம் பேசினார் ம.பொ.சி.

இப்படி எல்லா வகையிலும் திராவிட இயக்கக் கொள்கைக்கு எதிராகவே இருந்த ம.பொ.சி.தான் உதயசூரியன் சின்னத்தில் நின்று சட்டமன்ற உறுப்பினரானார். பதவிக்காக இவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். திமுக ஆட்சிக் காலத்தில் மேலவைத் துணைத் தலைவரானார். அடுத்து அதிமுக வெற்றிபெற்ற போது எம்.ஜி.ஆர். ஆட்சியில் மேலவைத் தலைவராகிவிட்டார். எம்.ஜி.ஆர் மறைந்த பிறகு மீண்டும் காங்கிரசுக்குப் போய்விட்டார். அப்போது இந்திய அமைதிப்படை ஈழத்துக்குப் போனது. அதையொட்டி அமைதிப் படை ஆதரவு பரப்புரைப் பயணம் என்ற ஒன்றை நடத்தினார்கள். அதில் ஜெயகாந்தன், தாபாண்டியன், ம.பொ.சி ஆகிய 3 பேரும்தான் முக்கியப் பேச்சாளர்கள்.

இவர்கள் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து அமைதிப் படைக்கு ஆதரவு மாநாடுகளை நடத்தினார்கள். கலைஞர் தெலுங்கர், தமிழர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று பேசும் இன்றைய தமிழ்த்தேசிய தலைவர்கள் தமிழர்களுக்கு இவ்வளவு துரோகம் செய்த ம.பொ.சியைப் பற்றி என்றாவது ஒருநாள் பேசியிருப்பார்களா? மணியரசன் போன்றவர்களைத்தான் கேட்கின்றோம். தமிழ்த் தேசிய தலைவர்கள் என்றால் இப்போது வந்த நடிகர்களைப் பற்றி நான் பேசவில்லை. தமிழ்பேசும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சராக வேண்டும் என்பதுதான் இவர்கள் பேசும் தமிழ் தேசியக் கொள்கை. இது தான் கொள்கை எனில், பன்னீர்செல்வம் முதலமைச்சரான போதே கோரிக்கை நிறைவேறிவிட்டது என்று கட்சியைக் கலைத்து விட்டு சென்றிருக்கலாம். இப்போது இரண்டாவது முதலைமைச்சரும் தமிழ்பேசும் குடும்பத்திலிருந்தே வந்துவிட்டார். ஆனால் தான் முதலமைச்சராக வேண்டுமென்பதுதான் தமிழ் தேசியம் என்கின்றார். இதைத் தமிழ்தேசியம் என்று சொன்னால் நாம் கேட்டுக்கொள்ள வேண்டுமாம். இப்படிப்பட்டவர்கள்தான் திராவிடர் இயக்கத்தைப் பற்றி, திராவிடர் இயக்கக் கொள்கைகளைப் பற்றி, திராவிடம் என்ற சொல்லைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

திராவிடம் என்பதை பாரதிதாசன் மறுத்து விட்டார் என்றும் இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முதலில் இரண்டு திராவிடம் பேசப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அண்ணா பேசிய திராவிட நாடு வேறு. 4 மாநிலங்களின் கூட்டரசாக திராவிட நாட்டை அறிவித்தார். ஆனால் பெரியாரோ சென்னை மாகாணத்தைதான் திராவிட நாடு என்றார். முன்பே சொன்னதுபோல கன்னடமும், மலையாளமும் பிரிந்துசென்ற பிறகு திராவிட நாடு திராவிடருக்கே என்று சொல்ல வேண்டாம், தமிழ்நாடு தமிழருக்கே என்று சொல்லுங்கள் என்றார் பெரியார். ஆனால் திராவிடம் என்ற கொள்கையை தவறு என்று சொல்லவில்லை.

பாரதிதாசன் எழுதிய தமிழுக்கும் அமுதென்று பேர் என்ற நூலில் இருக்கிற கவிதை ஒன்றை இங்கு சொல்ல வேண்டும். 15.07.1958இல் குயில் ஏட்டில் இந்தக் கவிதையை எழுதுகிறார்.

*திராவிடம் இது தமிழகம் என்பதன் திரிபு; ஆதலின் தமிழ்ச் சொல்லே. ஆரியம் அன்று. இதுபற்றிப் பல தடவை களில் என்னால் எழுதப்பட்ட வெண்பாக்கள் இங்கே தரப்படுகின்றன.*

*பாலி மொழியிற் பகர்ந்த மகாவமிச*
*நூலில் ஒருசெய்தி நோக்குகின்றோம்! - மேலாம்*
*தமிழ் என்ற சொல்லைத் தமிழோஎன் றார்! ஏன்?*
*தமிழரல்லார் நாக்குத் தவறு.*

*தமிழ் நாட்டை ஆசிரியர் தாலமி முன்னாள்*
*தமிரிசி என்றுரைத்தார். தாம்ஓர் - தமிழரல்லர்!*
*ஆதலினால் தோழா அயலார் ஒருசொல்லை*
*ஓதலினால் மாறுபடல் உண்டு.*

*தமிழென்று சாற்றுதற்கு மச்ச புராணம்*
*த்ரமிளென்று சாற்றியதும் காண்க - தமிழா*
*படியைப் ப்ரதிஎன்னும் பச்சைவட வோரிப்*
*படியுரைத்தால் யார்வியப்பார் பார்.*

*தமிழோவும் மற்றும் தமிரிசியும் வேறு*
*த்ரமிள த்ரமில் எல்லாம் சாற்றின் - தமிழின்*
*திரிபே அவைகள்! செந்தமிழ்ச் சொல் வேர்தான்*
*பிரிந்ததுண்டோ இங்கவற்றில் பேசு.*

*திரிந்ததமிழ்ச் சொல்லும் தமிழ்ச்சொல்லே ஆற்றில்*
*பிரிந்தவாய்க் காலும் பிரிதோ? - தெரிந்த*
*பழத்தைப் பயம்பளம் என்பார் அவைகள்*
*தழைந்த தமிழ்ச்சொற்கள் தாம்.*

*உரைத்த இவை கொண்டே உணர்க தமிழம்*
*திராவிடம் என்றேதிரிந்த தென்று! - திராவிடம்*
*ஆரியர்வாய் பட்டுத் திரிந்தாலும் அந்தச்சொல்*
*ஆரியச்சொல் ஆமோ அறி.*

*தென்குமரிப் பஃறுளியும் சேர்வடக்கு மாமலையும்*
*நன்கெல்லை கொண்ட நடுவிடத்தில் - மன்னும்*
*பொருள்கள் பலவாம்! பொலிந்தனவே அந்தப்*
*பொருள்கள் தமிழ்ப் பெயரே பூண்டு.*

*திராவிடம் தன்னந் தனியா ரியமா?*
*திராவிடம் இன்பத் தமிழின் - திரிபன்றோ!*
*இன்பத் தமிழகத்துக் கிட்டார் திராவிடப் பேர்*
*என்பார்சொல் ஏற்புடைய தன்று.*

*திராவிடம் என்னல் தமிழின் திரிபே*
*திராவிடம் ஆரியச்சொல் அன்று -திராவிடம்*
*வெல்க என்று சொன்னால் நம் மேன்மைத் தமிழர்கள்*
*வெல்க என்று விண்டதுவே யாம்.*

- என்று எழுதினார் பாரதிதாசன்.

ஆனால் பாரதிதாசன் திராவிடத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று மணியரசன் பேசுகிறார். ஆனால் பாரதிதாசனோ 1958ஆம் ஆண்டில் திராவிடமும், தமிழும் ஒன்றுதான் என்று வலியுறுத்தி பாடியுள்ளார். ஆனால் பெரியார் 1956ஆம் ஆண்டிலேயே திராவிடநாடு என்ற முழக்கத்தை ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று மாற்றி அமைத்தார்.

**(அடுத்த இதழில் முடியும்)**

**தொகுப்பு : ந. பிரகாசு**

### கொளத்தூர் தோழர்கள் அதிரடி நடவடிக்கையால்

## அரசு அலுவலகத்தில் ஆயுத பூஜை நிறுத்தம்

அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை கொண்டாடுவது அரசாணைக்கு எதிரானது என்று கொளத்தூர் கழகத் தோழர்கள் அரசு அலுவலகங்களில் மனு கொடுத்தனர். கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் நாங்கள் அப்படித்தான் கொண்டாடுவோம் என்று கூறவே தோழர்கள் கொளத்தூர் காவல்துறையில் அரசாணையைக் காட்டி புகார் செய்தனர். அதைத் தொடர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர் கொளத்தூர் காவல்துறைக்கு கீழ்க்கண்ட கடிதத்தை எழுதியுள்ளார்.


அனுப்புதல்
வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஊராட்சி ஒன்றியம்,
கொளத்தூர்.

பெறுதல்
உதவி ஆய்வாளர்,
காவல் துறை,
கொளத்தூர்.

ந.க.எண்.3368/2018/அ4 நாள் : 30.10.2018.

அய்யா,

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அரசின் கொள்கைகளுக்கு முரணாக எவ்விதமான வழிபாடுகள் இனி வரும் காலங்களில் செய்யப்பட மாட்டாது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Sd/-
வட்டார வளர்ச்சி அலுவலர் [illegible]
கொளத்தூர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
கொளத்தூர்.

30.10.18.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்.

**ஆனை மலை :** நவம்பர் 23ஆம் தேதி ஆனைமலையில் கோவை புறநகர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் ஆனைமலை விடுதி அரங்கில் வினோதினி கடவுள் மறுப்புடன் தொடங்கியது. கழகப் பொறுப்பாளர்கள் வெள்ளியங்கிரி, மடத்துக்குளம் மோகன், நிர்மல், நேருதாஸ் உரையைத் தொடர்ந்து சூலூர் பன்னீர்செல்வம், அமைப்புச் செயலாளர், பொருளார், பொதுச் செயலாளர், தலைவர் உரையாற்றினர். கழக ஏட்டுக்கு திரட்டிய சந்தாக்களை தோழர்கள் ஒப்படைத்தனர்.

**பொதுக் கூட்டம் :** தொடர்ந்து மாலை 7 மணியளவில் ஆனைமலையில் சட்ட எரிப்பு நாள் விளக்கப் பொதுக் கூட்டம் ஆனைமலை நரசிம்மன் நினைவு திடலில் வே. அரிதாசு (நகர செயலாளர்) தலைமையில் நடந்தது. தோழர்கள் கணேசு, அப்பாதுரை, ஆனந்த் முன்னிலை வகித்தனர். கோ. சபரிகிரி வரவேற்புரையாற்றினார்.

தோழர்கள் வெள்ளியங்கிரி, மடத்துக்குளம் மோகன், ஆசிரியர் சிவகாமி ஆகியோர் உரையைத் தொடர்ந்து பொதுச் செயலாளர், கழகத் தலைவர் உரையாற்றினர். அரசியல் உருவாக்க மோசடிகள், பெரியார் காட்டிய எதிர்ப்பு, வரைவுக் குழுத் தலைவரான அம்பேத்கர், சட்ட உருவாக்கத்தில் சந்தித்த நெருக்கடிகள், சட்ட எரிப்புப் போராட்டத்தில் பெரியார் தொண்டர்கள், சிறைவாசத்தை அஞ்சாமல் எதிர்கொண்ட துணிவு ஆகிய வரலாற்றுச் செய்திகளை விரிவாக விளக்கி ஒன்றரை மணி நேரம் பேசினார்.

**சட்ட எரிப்புப் போராளிக்கு மரியாதை :** சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்ற சட்ட எரிப்புப் போராளி ஆறுமுகம் நிகழ்வில் பங்கேற்றார். அவருக்கு கழகத் தலைவர், பொதுச்செயலாளர் ஆடை போர்த்தி மரியாதை செலுத்தினர். சட்ட எரிப்புப் போராட்டத்தில் அதிக தோழர்கள் பங்கேற்றப் பெருமை ஆனை மலை நகருக்கு உண்டு. வினோதினி நன்றி கூறினார்.

**பழனி :** நான்காம்நாள் நவம்பர் 24ஆம் தேதி கழகத் தோழர்கள் சந்திப்பு திண்டுக்கல் மாவட்டம் பழனியில் வண்டிக்காரன் பாளையம், பெரியார் படிப்பகத்தில் நடந்தது. மருதமூர்த்தி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். தோழர்கள் செல்வராஜ் (திண்டுக்கல் நகரத் தலவர்), மோகன், கார்த்தி, ஆனந்த், கிருஷ்ணன், துரை ஆகியோர் கழக ஏடுகளுக்கு சந்தா சேர்க்கும் பணியை டிசம்பர் 15க்குள் முடித்து விடுவதாக உறுதியளித்தனர்.

**திருச்சி :** நவம்பர் 24ஆம் தேதி மாலை கலந்துரையாடல் கூட்டம் திருச்சி சத்திரம் பகுதியில் உள்ள புனித ‘அந்தோணிசாமி சர்ச்’ மண்டபத்தில் நடந்தது. திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் சார்பில் நடந்த கலந்துரையாடலில் கழகப் பொறுப்பாளர்கள் புதியவன், அந்தோணிசாமி, மனோகர், துரை தாமோதரன் (பெரம்பலூர்), டார்வின்தாசன், வழக்கறிஞர் சந்துரு, மணிகண்டன், அசோக் (திருவரங்கம்), குணாராஜ், ஞான சண்முகம், மருத்துவர் முத்து ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து சூலூர் பன்னீர்செல்வம், பொருளாளர், பொதுச் செயலாளர், தலைவர் உரையாற்றினர். கழகத் தலைவர் தோழர்களுடன் ஆலோசித்து கீழ்க்கண்ட பொறுப்பாளர்களை அறிவித்தார்.

திருச்சி மாவட்டக் கழகத் தலைவர் மி.இ. ஆரோக்கியசாமி, மாவட்ட செயலாளர் மு. மனோகரன், அமைப்பாளர் த. புதியவன், பொருளாளர் ஞா. டார்வின் தாசன், திருச்சி மாநகர அமைப்பாளர் வழக்கறிஞர் சந்துரு, திருவரங்கம் நகர அமைப்பாளர் த. அசோகன், திருவெறும்பூர் ஒன்றிய அமைப்பாளர் ந. குணாராஜ், திருவெறும்பூர் ஒன்றிய தலைவர் மணிகண்டன்.

**பெரம்பலூர்:** மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன், நகர செயலாளர் ராஜேஷ் குமார், மாவட்ட அமைப்பாளர் பழனி முருகன், நகர அமைப்பாளர் சுதாகர்.

கலந்துரையாடல் கூட்டங்களில் கழக ஏடுகளான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ இதழ்களை பரப்புவது குறித்தும், டிசம்பர் 24இல் திருச்சியில் நடக்கவிருக்கும் கருஞ்சட்டைப் பேரணியில் பெரும் எண்ணிக்கையில் தோழர்கள் பங்கேற்க வேண்டியது குறித்தும் வலியுறுத்திப் பேசப்பட்டது.

இரண்டாவது கட்ட கலந்துரையாடல் நவம்பர் 30 அன்று சேலத்தில் தொடங்குகிறது.

**- நமது செய்தியாளர்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
9841489896 newsdvk@gmail.com

## தலைமைக் கழக அறிவிப்பு

அன்பு தோழர்களுக்கு வணக்கம்.

14.10.2018 அன்று திருப்பூரில் நடைபெற்ற கழகச் செயலவையின் தீர்மானங்களை நினைவூட்டுகிறோம்.

அவற்றின் நிறைவேற்றம், முன்னேற்றம், கீழ்க்கண்ட செயல் திட்டங்கள் குறித்து ஆயவும், கலந்துரையாடவும் முதற்கட்ட பயணம் ஒன்றினை திட்டமிட்டுள்ளோம். இப்பயணத்தில் கழகத்தலைவர், பொதுச் செயலாளர், தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

டிசம்பர் 5 முதல் 9 வரை இருந்த மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது.

**மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் – மாற்றியமைக்கப்பட்ட புதியப் பட்டியல்**

15.12.2018 - சனி காலை - நெல்லை, தூத்துக்குடி; 16.12.2018 - ஞாயிறு காலை - கன்னியாகுமரி; 19.12.2018 - புதன் மாலை - விழுப்புரம்; 20.12.2018 - வியாழன் காலை - வேலூர்; மாலை - காஞ்சிபுரம்; 21.12.2018 - வெள்ளி காலை - சென்னை; மாலை - பாண்டிச்சேரி; 22.12.2018 - சனி மாலை - மதுரை.

திட்டமிடப்பட்டுள்ள நாள்களில் அந்தந்த மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள், மாவட்ட கலந்துரையாடலை ஏற்பாடு செய்து, விவரத்தை தலைமைக் கழகத்துக்கு விரைவில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**ஆய்வுப் பொருள்கள்:**

1. பெரியார் முழக்கம், நிமிர்வோம் உறுப்பினர் சேர்க்கை. 2. கழகக் கட்டமைப்பு நிதி. 3. டிசம்பர் 24, பெரியார் நினைவு நாள், திருச்சி-உரிமை மீட்பு கருஞ்சட்டைப் பேரணி, மாநாடு. 4. மாவட்ட கழகம் புதுப்பித்தல்.

இப்பயணத்தின் மாலை கலந்துரையாடல் நடைபெறும் ஊர்களின் பொதுக் கூட்ட ஏற்பாடுகள் குறித்து பரப்புரைச் செயலாளர், தலைமைக் கழகச் செயலாளர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*விடுதலை இராசேந்திரன்*
*பொதுச் செயலாளர்*

*கொளத்தூர் மணி*
*– தலைவர்*

## ஈரோடு (வடக்கு) மாவட்ட பரப்புரைப் பயணம்

பெரியார் 140 ஆவது பிறந்த நாள் விழாவினை ஈரோடு வடக்கு மாவட்டம் வாரந்தோறும் தமிழர்கல்வி உரிமை மீட்பு பரப்புரைப் பயணமாக நடத்தி வருகின்றது. மழை காரணமாக மற்றும் செயலவைக் கூட்டம் காரணமாக இரு வாரங்கள் ஒத்திவைக்கப்பட்ட பரப்புரைப் பயணம் இந்தவாரம் நம்பியூர் ஒன்றியம் குருமந்தூர் பகுதியில் துவங்கியது. குருமந்தூர் மேட்டில் அமைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக்கம்பத்தில் குருமந்தூர் திமுக பகுதி செயலாளர் குழந்தைவேல் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து பெரியார் பிஞ்சு அறிவுக்கனல் பகுத்தறிவுப் பாடலை பாட பரப்புரை பயணம் தொடங்கியது. பயணத்தின் நோக்கத்தை விளக்கி மாவட்ட செயலாளர் வேணுகோபால் தலைமையில் கழகப் பேச்சாளர் வேலுச்சாமி, மாநில வெளியீட்டு செயலாளர் இராம இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர். அலிங்கியம் செந்தில் அனைவருக்கும் நன்றி கூறினார். கழகத் தோழர் செந்தில் அனைவருக்கும் தேனீர் ஏற்பாடு செய்து இருந்தார்.

பயணக்குழு அடுத்து அளுக்குளி பகுதிக்கு வந்தது. அளுக்குளி தங்கம் வரவேற்புரையாற்ற பெரியார் பிஞ்சு அறிவுக்கனல் பகுத்தறிவு பாடலோடு நிகழ்வு துவங்கியது. பயணத்தின் நோக்கத்தை விளக்கி நம்பியூர் ஒன்றிய செயலாளர் இரமேசு, தோழர்கள் வேணுகோபால், வேலுச்சாமி, இராம.இளங்கோவன் உள்ளிட்டோர் உரையாற்றினார்கள். தோழர் செயபால் நன்றி கூற பயணம் நிறைவுற்றது. தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவை அளுக்குளி தங்கம் ஏற்பாடு செய்து இருந்தார். பயணத்தின் இறுதிவரை அலிங்கியம் பகுதி விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். பயணத்திற்கான ஏற்பாடுகளை குருமந்தூர் மற்றும் அளுக்குளி பகுதி தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

## தீபாவளி பட்டாசு: காவல்துறையிடம் விழுப்புரம் மாவட்டக் கழகம் மனு

தீபாவளி அன்று 2 மணிநேரம் மட்டும் பட்டாசு வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்க வேண்டுமென்றும் அதை மக்களிடம் அறிவிப்பு செய்ய வேண்டும் என்றும் அரசு துறையில் பணியாற்றுபவர்கள் நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்க நடவடிகை எடுக்கவும் மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விழுப்புரம் கழக சார்பில் கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள காவல் நிலையங்களுக்கும் அரசு நிர்வாகங்களுக்கும் 4.11.2018 அன்று கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஞாயிற்றுகிழமை விடுமுறை என்பதால் அவர் வீட்டிற்கு சென்று கடிதம் கொடுக்கப்பட்டது. விழுப்புரம் கிழக்கு மாவட்ட கழகத் தலைவர் பூ.ஆ.இளையரசன், மாவட்ட அமைப்பாளர் சிறீதர் ஆகியோர் அதிகாரிகளை சந்தித்து கடிதம் கொடுத்துள்ளனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th November 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN